**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்</u>**

O.S.No.52/2025

வாதி தரப்பு சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 30.03.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>வா.சா.1– திருவேங்கடம் த/பெ வடமலை</u>**

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. நான் எந்த ஊரில் இருந்து வருகிறேன் என்றால் குளித்தலையில் இருந்து வருகிறேன். நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் கண்டக்டராக இருந்து ஓய்வு பெற்று விட்டேன். என்னுடன் உடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் 7 பேர் ஆகும். அவர்கள் பெயர்கள் முறையோ 1. ராஜேந்திரன். 2. ராமசாமி 3. சீரங்கி 4. ரங்கசாமி 5. தாதன் 6. ஜெயலட்சுமி ஆகியோர்கள் ஆவார்கள் நான்காவதாக நான்.

2. தாவா சொத்தில் எப்போது வீடு கட்டினேன் என்றால் சுமார் 35 வருடங்களுக்கு முன்பு கட்டியது. தாவா சொத்தின் மின்சார ரசீது, வீட்டு வரி ரசீது யார் பெயரில் உள்ளது என்றால் எனது தம்பி பெயரில் உள்ளது. தாவா சொத்தின் சர்வே எண் 219/2 பி ஆகும். தாவா சொத்தின் நான்கெல்லைகள் வடக்கு பக்கம் ரோடு, கிழக்கு பக்கம் மெயின் ரோடு, தெற்கு பெரியசாமி வீடு, மேற்கே எனது அம்மாவின் பூர்வீக சொத்து உள்ளது.

3. உடன் பிறந்தவர்களுடன் சுமூகமான உறவில் உள்ளோமா என்றால் காழ்ப்புணர்ச்சி காரணமாக தற்போது இல்லை . உடன் பிறந்தவர்கள் அனைவருக்கும் திருமணம் ஆகிவிட்டதா என்றால் திருமணம் ஆகிவிட்டது.

**<u>பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக வழக்கு வாய்தா ஒத்தி வைக்கப்படுகிறது.</u>**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.30 17:36:14 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.